## பெப்ரவரி – 20 – செவ்வாய்

**புனித யுக்கேரியுஸ்**
**துணைவேண்டி நான் ஆண்டவரை மன்றாடினேன்: திபா. 34:4**

### முதல் வாசகம் : எசாயா 55:10-11

ஆண்டவர் கூறுவது: மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல், அங்குத் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே, என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை.

**பதில்பாடல் :** நீதிமான்களை இறைவன் அனைத்துத் துன்பங்களிலிருந்தும் விடுவிக்கிறார்.

### நற்செய்தி : மத்தேயு6 : 7 - 15

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது: நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம் மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள்.நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார்.ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்” விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக!உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்.எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும்.எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். (”ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமக்கே. ஆமென்.”)மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்.மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்“என்றார்.

**தியானம்:** இயேசு சீடர்களுக்கு செபிக்கக் கற்றுக் கொடுக்கும் போது கடவுளை “தந்தையே” என அழைக்க சொல்லித்தருகின்றார். ஜெபத்தில் நாம் யாரோ ஒருவரிடம் அல்லது எங்கோ இருக்கிற ஒருவரிடம் பேசவில்லை, மாறாக நம்முடைய தந்தையோடு பேசுகின்றோம் என்ற உணர்வினை ஆண்டவர் இயேசு உணர்த்துகின்றார். அடுத்ததாக இயேசு உமது பெயர் தூயதென போற்றப்பெறுக, உமது ஆட்சி வருக என்று சொல்லி ஜெபிக்க சொல்லித்தருகின்றார். கடவுளுடைய பெயரை அறிந்தோர் அவர் மீது நம்பிக்கை வைப்பர், ஆண்டவர் அவர்களைக் கைவிடுவதில்லை என்கிறது திருப்பாடல் 9:10. ஆண்டவர் இயேசு இதனை அறிந்தவராய் ஆண்டவருடைய திருப்பெயரை சொல்லி வணங்கச் சொல்லி அவரிடமிருந்து நிறைவான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள அழைப்புவிடுகின்றார். இரண்டாம் பகுதி நமது தேவைகளுக்காக வேண்டுகின்ற மூன்று விதமான வேண்டுதல்கள் முக்காலத்துக்குமான வேண்டுதல்களாக இருக்கின்றன. எங்கள் அன்றாட உணவைத்தாரும் என்கிற வேண்டுதல் நிகழ்காலத்திற்குரிய வேண்டுதலாக இருக்கின்றது. எங்களுக்கு எதிராக குற்றம் செய்வோர் அனைவரையும் நாங்கள் மன்னிப்பதால் இறைவன் நம்முடைய பகைவர்கள் எதிரிகள் நமக்கெதிராக செய்த குற்றங்களை நாம் மன்னிப்பதால் இறைவன் நம்முடைய குற்றங்களை மன்னிக்க வேண்டும் என்று செபிக்கச் சொல்கிறார். ஆகையால் இயேசு கற்றுத்தருகின்ற இந்த உன்னதமான முக்காலத்துக்குமான ஜெபத்தினை நாம் உருக்கமாகச் சொன்னால் போதும் கடவுளிடமிருந்து ஆசியைப் பெற்றுக் கொள்வது உறுதி.